மாகாணத்தில் நெருக்கடி ஏற்பட்டது. மேலும் வெளியே போகக் கூடாது என்பதற்குத் தடை போட மத்திய அரசாங்கம் நமக்கு ஒப்புதல் கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, நல்லெண்ணத்தை வைத்து, கரும்பு ஆலைக் காரர்களை எல்லாம் கூப்பிட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும், நானும் பல தடவை பேசி "நீங்கள் இந்த 60 சதவிகிதத்தை சர்க்காருக்கு கொடுத்து விடுங்கள். மற்றபடி வேறு எங்கும் விற்காமல் மீதியை இங்கேயே விற்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டதின் பேரில், அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அதற்கு விலை ரூ. 350 என்று போடப்பட்டது. சர்க்கார் துறையில் கொள்முதலில் வாங்குகிற விலை ஏறக்குறைய 162 ரூபாய். நாம் ரூ. 101 75-க்கு வெளியிலே விற்கிறோம். அதனால் நஷ்டம் வருகிறது. சர்க்கரை ஆலைகளுக்குக் கூட நஷ்டம் வருகிறது. இருந்தாலும் இதை "மேக்கப்" செய்கிறார்கள். நமது மாநிலத்தில் இது அற்புதமான திட்டம் என்று மற்ற மாநிலங்களில் சொல்கிறார்கள். ஆந்திராவில், கேரளாவில், பீகாரில் இல்லாத நிலைமையை நம்முடைய சர்க்கார் இங்கு செய்திருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 700 ரூபாய்க்குக் கூட விற்கப் படுகிறது என்று சொன்னார்கள். அங்குள்ள பழைய முதலமைச்சர் அந்த விலை கொடுத்து தன்னுடைய வீட்டுக் கல்யாணத்திற்கு வாங்கினார் என்று கூட சொன்னார்கள். இந்தத் திட்டம் இன்னும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

Drought condition in Periyakulam and Palani taluks

*196—*Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :--

(*a*) whether it is a fact that sowing was not done because of failure of rain for the last six months which resulted in drought in Periyakulam and Palni taluks of Madurai district ; and

(*b*) if so, whether the Government will take any famine relief measures ?

பெரியகுளம், பழனி தாலூகாக்களில் பஞ்ச நிலை.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு—வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலூகா, பழனி தாலூகா முதலிய இடங்களில் சென்ற 6 மாதமாக மழை இல்லாததால் விதை விதைப்பு நடைபெறாமல் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பது தெரியுமா ?

(இ) ஆமெனில், பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் தமிழக அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, என்னுடைய சொந்தக் கிராமத்திலேயே 300 ஏக்கர் நஞ்செய் தீய்ந்து போய்விட்டது. தேனியிலிருந்து போடி வரை 10 மைல் அளவிற்கு கால்வாய்களில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து விட்டன. கண்டமநாயக்கனூர் பகுதியில் எல்லா நிலமும் காய்ந்து ஒரு மணி நெல் கூட விளையவில்லை. அந்த பரிதாபகரமான நிலைமை ஏற்பட்ட பிறகும்கூட, இந்த அரசாங்கம் கல் நெஞ்சத்தோடு "இல்லை" என்று சொல்வது சரியா ? ஏரிகள்தான் வரண்டுவிட்டதென்றால் அமைச்சர்கள் நெஞ்சும் வரண்டுவிட வேண்டுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அரசிற்கு கல் நெஞ்சம் இடையாது. கல்போல் இருந்து திரும்பச் சொல்கிறேன். "மாடு, கன்றுகள் இறக்க வேண்டும், அங்கேயிருக்கிறவர்கள் சாப்பாட்டிற்கு இல்லாத

நிலைமை ஏற்பட்டு, தீவனங்கள் கிடைக்கவில்லை, ஊரிலேயிருக்கிற சினிமா கொட்டகைகள் வசூலாகவில்லை, பஸ்கள் தேனியிலே நின்றுவிட்டன, கம்பம் வழியாகப் போகவில்லை, யாரிடமும் வருமானமில்லை, விவசாயக் கூலிகள் எட்டணா, ஆறணா கொடுத்தால் வேலைக்கு வருவார்கள் " என்ற நிலைகள்தான் பஞ்சத்திற்கு அறிகுறியாகும். நண்பர் தியாகராஜன் அவர்கள் மாவட்டக்கழகத் தலைவராக இருந்திருக்கிறார்கள். பஞ்சம் பற்றி அவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் கொஞ்சம் மழை யில்லாமல் இருந்தது. கிணறுகள் எல்லாம் வறண்டிருந்தன, செப்டம்பர் வரையில். அதற்குப் பிறகு நல்ல மழை பெய்தது. அவர் களுக்குத் தெரியும். செப்டம்பருக்கு பிறகு அவருடைய வட்டாரத்திலே மழை பெய்தது. வழக்கமாக ஏற்படக்கூடிய அந்த நிலைமை பஞ்சம் என்பதற்கான இலக்கணத்திற்கு உள்பட்டதாகாது. ஜில்லாபோர்டு நிர்வாகம் தெரிந்து நண்பர் தியாகராஜனுக்கு பஞ்சமென்றால் என்ன வென்று நன்கு தெரியும். அவர் கூறியது பஞ்சத்திற்கான நிலைமையில் வரவில்லை.

Seizure of paddy.

*** 197.** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :—

(*a*) whether it is a fact that police entered into the residence of Thiru Nagamani Naicker, in Thulasapuram Kandigai village in Sriperumbudur taluk of Chingleput District and seized paddy while he was away from his residence on 21st September 1967 ;

(*b*) the reasons therefor ; and

(*c*) the result of the case filed against the Government by Thiru Nagamani Naicker in the High Court in this regard ?

நெல் பறிமுதல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும்புதூர் தாலூகா, துளசாபுரம் கண்டிகை கிராமத்தில் திரு நாகமணி நாயக்கர் வீட்டில் 21–9–1967 அன்று அவர் இல்லாத நேரத்தில் போலீசார் சென்று நெல் பறிமுதல் செய்தது உண்மையா ?

(இ) காரணம் என்ன ?

(உ) இதுபற்றி உயர்நீதி மன்றத்தில் நாகமணி நாயக்கர் சர்க்கார் மீது போட்ட வழக்கு என்னவாயிற்று ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ–உ) புகார் செய்யப்பட்டபடி சோதனையோ, பறிமுதலோ நடக்கவில்லை. ஆனால், இது சம்பந்தமாக தனிப்பட்ட பிராது ஒன்று நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், இதைப் பற்றி மேலும் தகவல்கள் தருவது பொருத்தமல்ல.

Fire Accidents

*** 198.** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Mnister for Food and Revenue be pleased to state :—

(*a*) the number of houses which caught fire and were reduced to ashes at Nakkala Kottai situated in Kovilpatti Panchayat Union of Tirunelveli District in 1967 ;

(*b*) the loss incurred therein;